மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது தனிச் சலுகையின்பாற்படும். இது மத்திய அரசாங்கம் வகுத்துத் தந்திருக்கிற திட்டத்தை மாநில அரசு நடைமுறைப்படுத்துகிற திட்ட மாகும். அதுபற்றி விவரம் வேண்டுமானால், தனிக் கேள்வி போடவும்.

வெள்ளக்கோவில் ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரியர்கள்.

*432 வினா—திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73-ம் கல்வி ஆண்டில், வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் எத்தனை இடைநிலை ஆசிரியர் பதவிகள் முதுநிலைப் பதவிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன ?

(இ) அப்பதவிகளுக்கு உரிய காலத்தில் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனரா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இரண்டு பணியிடங்கள்.

(இ) ஆம்.

கும்முடிப்பூண்டி உயர்நிலைப்பள்ளி.

*433 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு இட வசதியைப் பெருக்கும்பொருட்டு புதிதாக ஆறு வகுப்பறைகள் கட்டுவதற்கான திட்டம் காலதாமதப்படுவதன் காரணம் என்ன ?

(இ) எப்போது அவை கட்டி முடிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) & (இ).—

கும்முடிப்பூண்டி அரசினர் (கழக) உயர்நிலைப்பள்ளிக்காக ஆறு அறைகள் கட்டும் நோக்குடன் ரூ. 1,07,000 மதிப்பீட்டில் முன்னதாக திட்டம் தயாரிக்கப்பட்டது. நிதிப்பற்றுக்குறையினால் ரூ. 36,000 மதிப்பீட்டில் துணைக்கட்டிடம் கட்டலாமென்று தீர்மானித்து, சைதை முதன்மைக்கல்வி அலுவலர் அதற்கான வரைபடமும் மதிப்பீடும் அனுப்பியுள்ளார். அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.